திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை என்பது திருச்சிக்கும் கரூருக்கும் இடையே ஒரு பேரூராட்சியாக இருந்தாலும், அது நகராட்சியாக இருக்க வேண்டிய ஓர் அமைப்பு. அந்த நகரத்திற்கு நீண்ட காலமாக பேருந்து நிலையம் இல்லை. வேறு தனியாரிடத்திலிருந்து வாடகைக்கு எடுத்து அந்த இடத்திலே பேருந்துகளை நிறுத்தும் நிலையும், கழிப்பிட வசதிகூட இல்லாத சீரழிந்த நிலையும் அங்கே இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அங்கே பேருந்துகள் நின்று சென்றுகொண்டிருக்கின்றன. அதனால் மக்கள் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அங்கே அவசியம் பேருந்து நிலையம் கட்டித்தரப்படுமா ? மீண்டும் அதுபற்றி ஆலோசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான பிரேரணை ஏதும் தற்போது இல்லை. இருந்தாலும் பேரூராட்சிக்கு உட்பட்ட வைகைநல்லூரில் சர்வே எண். 107/1-ல் அமையப்பட்டுள்ள தற்போதைய தற்காலிக பேருந்து நிலையத்திற்கான இடம் அருள்மிகு பேராளம்மன் ஆலய நிர்வாகத்திடம் இருக்கிறது. பொதுவாக ஒரு கொள்கை அளவில் கோயில் நிலங்களை வேறு எதற்கும் மாற்றுவதற்கில்லை என்று தற்போது இருப்பதை மாற்றி அதற்கான மேல் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் முயற்சித்துக் கொண்டிருக்கிறார். அது முடிவுற்ற பிறகு இத்திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை பேரூராட்சியிலே சுற்றுப்புறத்தில் இருக்கிற படுகைகள் நஞ்சை நிலங்களாக இருப்பதால், கோயில் நிலங்களைத் தவிர வேறு வசதிகள் அங்கே இல்லாத பேராளம்மன் கோயில் நிலமாக இருந்தாலும் கடம்பர் கோயில் நிலமாக இருந்தாலும் இந்த நிலங்கள் எல்லாம் பஞ்சாயத்தில் இருக்கின்றன. இந்த இடத்தில் நில ஆர்ஜிதம் செய்து எப்படியாவது அதனை கட்டித்தர அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

மதுரையில் சுரங்கப்பாதை அமைத்தல்.

*3202. திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை நகரில் கட்டபொம்மன் சிலை அருகே சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

1990 சனவரி 19]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை,

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

9.50 மணி

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரவர்கள் உலக வங்கி நிதி உதவியுடன் பூங்கா, ரோடுகள், பயணியர்கள் தங்கும் விடுதி, மதுரை சாலையில் இரயில்வே மேம்பாலத்தைப் பல அடுக்கு மேம்பாலமாகக் கட்டுவதற்கான திட்டம் உள்ளது என்று அறிவித்து இருக்கின்றார். எனவே இந்தச் சுரங்கப்பாதை அமைக்கும் பணியை அந்தத் திட்டத்துடன் சேர்த்துத் துவங்கு வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வினாவுக்குரிய இடம் மதுரை மாநகரத்தில் பாதசாரிகள் போகிற சுரங்கப்பாதை எதுவும் இல்லாது இருந்தாலும் மதுரை மாநகரத்தில் கட்டபொம்மன் சிலை அருகில் அதாவது பெரியார் பேருந்து நிலையத்திற்கும் புதிய பேருந்து நிலையத்திற்கும் இடையே சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் அருகிலுள்ள இரயில்வே மேம்பாலம் உலக வங்கித் திட்டத்தின் கீழ் பெருவழித்துறையால் விரிவுபடுத்தப்பட உள்ளது. அவ் வேலை முடிந்தவுடன்தான் சுரங்கப்பாதை அமைப்பது பற்றி பரிசீலனை செய்ய முடியும். அதற்கான ஆய்வு மேற்கொள்ளப் படும்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரை மாநகராட்சியாக இருப்பதால் அங்கு வந்து செல்கின்ற மக்கள் அதாவது 'ஃபுளோட்டிங் பாப்பு லேஷன்' என்று சொல்கின்ற மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கின்றது. எனவே கட்டபொம்மன் சிலை அருகில் போக்கு வரத்துக்கு அதிக இடைஞ்சலாக இருப்பதால் அந்த இடத்தில் சுரங்கப்பாதை கட்டுவதற்கு அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவல்துறையினர் அதை மிக நுண்ணியமாகக் கவனித்து வருகிறார்கள். போக்குவரத்து நெரிசலைத் தடுக்க அவ்வப்போது நடவடிக்கை எடுத்துத் தடுத்து வருகிறார்கள். இருப்பினும் மேம்பாலம் கட்டும் முயற்சி முடிவுற்று அந்த வேலை முடிந்ததற்குப் பிறகுதான் அந்தப் பணியை துவக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மதுரைக்கு அண்மையில் வந்திருந் தார்கள். மதுரையில் ஜனநெருக்கம் அதிகமான காரணத்தினால் நான் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்ததைப்போல் கோரிப் பாளையம் தேவர் சிலை அருகிலும், இரயில்வே ஸ்டேஷன் டவுன்ஹால் ரோடு சந்திப்பிலும், செயிண்ட் மேரீஸ் கீழவெளிப் பகுதியிலும், யானைக்கால் பகுதியிலும் சுரங்கப்பாதை அமைக்க வேண்டும் என்பது அவசியம் என்றே தெரிகிறது. அதற்கான நடவடிக்கை எடுத்து விரைவில் மேம்பாலம் கட்டிக் கொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தனிக் கேள்வி போடவும்.

கிருஷ்ணகிரியில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*3502. டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியில் ஏற்கனவே 33/11 கே. வி. மின்அழுத்தம் உள்ள ஒரு துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. இத்துணை மின் நிலையத்தை 110/33—11 கே.வி.மின் அழுத்தம் உள்ள துணை மின் நிலையமாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

டாக்டர் க. காஞ்சனா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பதில் ஏதேனும் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இத்துணை மின் நிலையம் நிறுவு வதற்கு தர்மபுரி மாவட்டம் எட்டினப்பள்ளி கிராமத்தில்